DINAKARAN 08 FEB 2010

# மகா சிவராத்திரியில் ஆன்மிகம் உச்சமாகும்

## ஜகி வாசுதேவ் தகவல்

கோவை, பிப்.8: மகா சிவராத்திரி தினத்தில் முதுகு தண்டை நேராக வைத்திருந்தால் ஆன்மிகம் உச்சமாகும் என ஜகி வாசுதேவ் கூறினார்.

கோவை ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் நிருபர்களிடம் கூறியதாவது;

ஈஷா யோக மையத்தில் கடந்த ஆண்டு மகா சிவராத்திரி தினத்தில் 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் குவிந்தனர். வரும் மகா சிவராத்திரி தினத்தில் 15 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வருவர். கூட்டத்தை குறைக்கவும், அனைவரும் ஆன்மிக நிகழ்வு காணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் 72 இடங்களில் திரை மூலம் ஈஷா நிகழ்வுகளை காண மகா சிவராத்திரி தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



மகாசிவராத்திரி விஞ்ஞான பூர்வமாக நடக்கும் இயற்கையான நிகழ்வு. சூரிய ஒளிவட்டம் தென் பகுதியிலிருந்து வட பகுதிக்கு செல்லும் தினம்.

பூமியின் மேல் மண்டலத்தில் ஒரு வகை ஈர்ப்பு ஏற்படும். அன்றைய தினத்தில் முதுகு தண்டை நேராக வைத்து உட்காரும் போது சக்தி மேல் நோக்கி எழும். எனவேதான் அன்றைய தினத்தில் தூங்காமல் சக்தியை உணருங்கள் என தெரிவித்து வருகிறோம். வேறு ஏதாவது இடத்தில் வேறு செயல்களை செய்யும் போது முதுது தண்டில் ஆன்மிக சக்தி எழும்பாது. மகா சிவராத்திரி தினத்தில் முதுகு தண்டை நேராக வைத்திருக்கும் நிலையில் உட்கார்ந்திருந்தால் ஆன்மிகம் உச்சமாகும்.

சுற்றுச்சூழல், நிலம் மாசுபடும் என்பதால், பி.டி. கத்தரிக்காய்க்கு அனுமதி வழங்கக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்

இவ்வாறு ஜகி வாசுதேவ் கூறினார்.